தமிழ் வளர்ச்சித் துறை

# சிறந்த நூல்களுக்குப் பரிசளிக்கும் திட்டம்
# 1975 - 1980

## பரிசு விவரக் குறிப்பேடு

பரிசு வழங்குபவர் :

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்

**திரு. எம். ஜி. ஆர். அவர்கள்**

விழாத் தலைவர் :

மாண்புமிகு தமிழ்நாடு கல்வி அமைச்சர்

**திரு. செ. அரங்கநாயகம் அவர்கள்**

வள்ளுவர் கோட்டம் - சென்னை 15—1—1982

# சிறந்த நூல்களுக்குப் பரிசளிக்கும் திட்டம்

1975 - 1980

## சிறந்த நூல்களுக்குப் பரிசளிக்கும் திட்டம்

பரிசுத் திட்டத்திற்குத் தகுதியுடைய நூல்களை அனுப்பி வைப்பதற்கு நாளினைக் குறிப்பிட்டுத் தமிழ், ஆங்கில நாளிதழ்களில் அறிக்கை வெளியிடப்படுகிறது.

நூலாசிரியராலோ, பதிப்பகத்தாராலோ உரிய காலத்திற்குள் அனுப்பப்படுகின்ற அச்சிடப்பெற்ற நூல்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**பரிசுக்குரிய 21 தலைப்புகள்.**

1. கவிதை, 2. நாவல், 3. மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள். 4. தமிழ், தமிழ்ப் பண்பாடு ஆகியவை பற்றிப் பிற மொழிகளில் வெளிவந்துள்ள நூல்கள். 5. மானிடவியல், சமூகவியல், நிலநூல், அரசியல், சட்டம். 6. பொருளாதாரம், 7. கணிதம். வானவியல். 8. பொறியியல், தொழில் நுட்பவியல். 9. மருத்துவம். உடலியல், உணவியல், நல்வாழ்வு. 10. தத்துவம், சமயம், அளவியல், அறவியல், 11. சிறு கதை, 12. நாடகம். 13. கவின்கலைகள். 14. கட்டுரை. வாழ்க்கை வரலாறு, சுயசரிதை, பயண நூல்கள். 15. தாவரவியல், விலங்கியல், புவியியல், உயிரியல், காட்டியல், 16. இயற்பியல், இரசாயனம். 17. கல்வி, உளவியல். 18. வரலாறு, தொல் பொருளியல். 19. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவம். 20. குழந்தை இலக்கியம். 21. சிறப்பு வெளியீடுகள்.

**பரிசுக்குரிய நூல்களைத் தேர்ந்தெடுக்கும் முறை.**

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற உறுப்பினர்களுள் மூவரை இப்பரிசுப் போட்டியை நடத்தும் நிலைக் குழு உறுப்பினர்களாக அரசு நியமிக்கின்றது. இந்நிலைக் குழு ஒவ்வொரு தலைப்பிலும் உள்ள நூல்களைக் கூர்ந்தாய்வு செய்து மதிப்பிடத் தனித் தனியே மூன்று நடுவணர்களை நியமிக்கின்றது.

நடுவணர்கள், தங்களால் கூர்ந்தாய்வு செய்யப்படும் நூல்களுக்கு மதிப்பெண்கள் வழங்குகின்றனர். நடுவணர் மூவரும் அளிக்கும் மதிப்பெண்களைக் கூட்டி, அதிக மதிப்பெண் பெறும் நூலாசிரியர் முதற் பரிசுக்குரியவராகவும், அடுத்த மதிப்பெண் பெறும் நூலாசிரியர் இரண்டாவது பரிசுக்குரியவராகவும் அறிவிக்கப் பெறுகின்றனர்.

ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் ஒரே அளவு மதிப்பெண் பெற்றிருந்தால் பரிசுத் தொகை அந்நூலாசிரியர்களுக்குச் சமமாகப் பகிர்ந்து வழங்கப்படுகின்றது.

ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் கூட்டு முயற்சியால் இயற்றப்பட்டுப் பரிசுக்குரியதென ஒரு நூல் தேர்ந்தெடுக்கப்படு மாயின் பரிசுத் தொகை கூட்டாக அமைந்த ஆசிரியர்களுக்குப் பகிர்ந்து வழங்கப் பெறுகின்றது.

ஆசிரியர்களின் சொந்த நூல்களின் மொழிபெயர்ப்பல்லா மல், வேறெந்த மொழி பெயர்ப்பு நூல்களும் இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

பரிசு பெற்றவர்களுக்குப் பரிசுகளைப் பெறுவதற்காகச் சென்னை வருவதற்கு மட்டும் முதல் வகுப்பு இரயில் கட்டணம் பயணப் படியாக அளிக்கப்படுகின்றது. வெளிநாட்டு ஆசிரியர் ஒருவரால் எழுதப்பெற்ற ஒரு நூல் இந்தியாவிலோ, வெளி நாட்டிலோ, வெளியிடப்பட்டிருந்து, பரிசுக்குரியதாகத் தேர்ந் தெடுக்கப்பட்டால் அந்நூலாசிரியர்க்குத் தகுதிச் சான்றிதழ் மட்டும் அளிக்கப்படும் ; பரிசுத் தொகை அளிக்கப்பட மாட்டாது.

இத்திட்டத்தின்படி 1975 முதல் 1980 வரையிலான ஆண்டு களில் வெளியான நூல்களுக்குத் தற்போது பரிசுகள் வழங் கப்படுகின்றன.

## சிறந்த நூல்களுக்குப் பரிசு

## பரிசு விவரப்

| எண் | தலைப்பு. | ஆண்டு. | பரிசு. நிலை. | பரிசுபெறும் நூலாசிரியர். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | கவிதை .. | 1975 | I | திரு. சாலை இளந்திரையன் .. |
| | | 1976 | I | திரு. காவிரிநாடன் .. .. |
| | | | II | திரு. வா. மு. சேதுராமன் .. |
| | | 1977 | I | திரு. மு. மேத்தா .. .. |
| | | | II | திரு. செங்கையழகன் .. |
| | | | II | ஆலந்தூர் திரு. கோ. மோகனரங்கன் |
| | | 1978 | I | திரு. வா. மு. சேதுராமன் .. |
| | | | II | திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி.. |
| | | 1979 | 1 | திரு. மு. பீ. பாலசுப்பிரமணியம் |
| | | | II | திரு. இளந்தேவன் .. |
| | | 1980 | I | திரு நா. காமராசன் .. |
| | | | II | திரு. அரங்க சீனிவாசன் . |

## வழங்கும் திட்டம் 1975-80

## பட்டியல்

| பரிசுக்குரிய நூல். | பதிப்பகத்தின் பெயர். |
|---|---|
| (6) | (7) |
| உரைவீச்சு .. .. .. | தமிழ்ப் புத்தகாலயம், 58, டி. பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–600 005. |
| பூமழை .. .. .. | பாப்பா பதிப்பகம், 14, இராமநாயக்கன் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை–600 034. |
| தாய் மண் .. .. | கவியரசன் பதிப்பகம், 1, சாமிப் பண்டாரம் தெரு, சிந்தாதிரிபேட்டை, சென்னை-600 002. |
| ஊர்வலம் .. .. .. | விஜயா பதிப்பகம், 102, ரெங்கே கவுடர் வீதி, கோயம்புத்தூர். |
| செங்கையழகன் கவிதைகள் .. | பாவலர் பாசறை, சின்னத் தெரு, திம்மாவரம், செங்கை மாவட்டம்-603 101. |
| இமயம் எங்கள் காலடியில் .. | வசந்தா பதிப்பகம், 21, தருமராசா கோயில் தெரு, ஆலந்தூர், சென்னை-600 016. |
| மலைநாட்டின் மீதினிலே .. | கவியரசன் பதிப்பகம், 1, சாமிப் பண்டாரம் தெரு, சென்னை-2. |
| பருவ மழை .. .. .. | வானதி பதிப்பகம, தி.நகர், சென்னை-17. |
| கவிதை மேகங்கள் .. .. | பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-1. |
| கனவு மலர்கள் .. .. .. | பொன்முத்துப் பதிப்பகம், 33, கசபதிலாலா சந்து, கிருட்டினாம்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5. |
| மலையும் ஜீவநதிகளும் .. | தமிழ்ப் புத்தகாலயம், 58, டி. பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. |
| காந்தி காதை .. .. .. | திருவள்ளுவர் பதிப்பகம், அம்மாக்கண்ணு அம்மையார் திருமண மாளிகை, சின்னச் செட்டித் தெரு, திருச்சி. |

| எண் | தலைப்பு. | ஆண்டு. | பரிசு. நிலை. | பரிசு பெறும் நூலாசிரியர். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2 | நாவல் | 1975 | .. | .. .. |
| | | 1976 | I | திரு. பொன்னீலன் .. |
| | | 1977 | I | திரு. வாசவன் .. .. |
| | | | II | திரு. பண்ணன் .. .. |
| | | 1978 | I | திருமதி கமலா சடகோபன் .. |
| | | | II | திரு. ஜே. எம். சாலி .. |
| | | 1979 | I | திரு. பொன். சௌரிராசன் . |
| | | | II | திரு. இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்). |
| | | 1980 | I | திரு. சு. சமுத்திரம் .. |
| | | | II | திரு. மாரி அறவாழி .. |
| 3 | மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள். | 1975 | I | திரு. மறை திருநாவுக்கரசு .. |
| | | | II | திரு கதிர் மகாதேவன் .. |
| | | 1976 | I | திரு. எம். எம். உவைஸ் .. |
| | | | II | திரு சு. பாலச்சந்திரன் .. |
| | | 1977 | I | திரு. சொ. ந. கந்தசாமி .. |
| | | | II | திரு. மா. இராமலிங்கம் .. |
| | | 1978 | I | திரு. முத்துக் கண்ணப்பன் .. |
| | | | II | திரு. இளங்கோ .. .. |

| பரிசுக்குரிய நூல். | பதிப்பகத்தின் பெயர். |
| --- | --- |
| (6) | (7) |
| .. | .. |
| கரிசல் .. .. .. .. | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்' 41, பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை-600 98. |
| மண்ணின் மணம் .. .. | வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-600 017 |
| பிராமணன் இங்கே .. .. | திருமலை பதிப்பகம், நுங்கம்பாக்கம், சென்னை, 600 034. |
| படிகள் .. .. .. | தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமி டெட், சென்னை-600 005. |
| கனாக் கண்டேன் தோழி .. | பூம்புகார் பிரசுரம், 15, மன்னார்சாமி கோயில் தெரு, சென்னை-600 013. |
| தாயகம் .. .. .. | பாரி நிலையம், 154, பிராட்வே, சென்னை-600 001. |
| நச்சு வளையம் .. .. .. | சோலை நூலகம், சதாசிவ நகர், மதுரை-625 020. |
| ஊருக்குள் ஒரு புரட்சி .. .. | மணிவாசகர் நூலகம், சிதம்பரம். கிளை, 241, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600 001 |
| கோடுகளும் புள்ளிகளும் .. | அருணோதயம், இராயப்பேட்டை, சென்னை–14. |
| பெரியபுராண ஆய்வுரை .. | மறைமலையடிகள் பதிப்பகம், சவகர் நகர், அகரம், சென்னை-82. |
| ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம். | இலட்சுமி வெளியீடு, 271, அறிஞர் அண்ணா நகர், மதுரை. |
| இஸ்லாமும் இன்பத் தமிழும் .. | யூனிவர்சல் பப்ளிசர்ஸ் அண்டு புக் செல்லர்ஸ், 155–156, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-1. |
| இலக்கியத் திறனாய்வு .. | அணியகம், 22, செல்லம்மாள் தெரு, சென்னை-30. |
| திருக்குறள் கூறும் உறுதிப் பொருள். | மணிவாசகர் நூலகம் 241, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-1. |
| விடுதலைக்கு முன் புதிய தமிழ் சிறு கதைகள். | தமிழ்ப் புத்தகாலயம், 576, பாரதியார் சாலை, சென்னை-5. |
| சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம். | அதிபத்தர் பதிப்பகம், 6, வசந்தா பிரஸ் சாலை, அருணாசலபுரம், சென்னை-20. |
| பாரதிதாசனின் கதைப் பாடல்கள். | தமிழ்மணி புத்தகப் பண்ணை, திருவல்லிக் கேணி, சென்னை-5. |

| எண் | தலைப்பு. | ஆண்டு. | பரிசு நிலை. | பரிசு பெறும் நூலாசிரியர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | 1979 | I | திரு. மா. செல்வராசன் .. |
| | | | II | திரு. ப. நீலகண்டன் .. |
| | | 1980 | I | திரு. ஜான் சாமுவேல் .. |
| | | | II | திரு. கதிர் மகாதேவன் .. |
| | மானிடவியல், சமூகவியல், பூகோளம், அரசியல், சட்டம். | 1975 | I | திரு. கே. எஸ். ஆனந்தம் |
| | | 1980 | I | திரு. கே. பகவதி |
| | | | II | திரு. க. காந்தி |
| 5 | குழந்தை இலக்கியம். | 1975 | I | திரு. வே. தில்லைநாயகம் |
| | | 1976 | I | வாண்டு மாமா |
| | | 1977 | I | வாண்டு மாமா |
| | | | II | திரு. கே. பி. நீலமணி |
| | | 1978 | I | ஆலந்தூர் திரு. கோ. மோகனரங்கன். |
| | | | II | திரு. பி. எல். இராசேந்திரன் |
| | | 1979 | I | திரு. வெ. நல்லதம்பி |
| | | | II | கல்வி கோபாலகிருஷ்ணன் |
| | | 1980 | I | திரு. தமிலன் |
| | | | II | திரு. குழ. கதிரேசன் |

| பரிசுக்குரிய நூல். | பதிப்பகத்தின் பெயர் |
|---|---|
| (6) | (7) |
| பாரதிதாசனை ஒரு புரட்சிக் கவிஞர். | பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை-600 001. |
| வண்ணப் பூக்கள் (மூன்று தொகுதிகள்). | வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-17 |
| ஷெல்லியும் பாரதியும் | மணி பதிப்பகம், 18, மன்னப்பன் நாயக்கர் தெரு, கோட்டூர், சென்னை-600 085. |
| பழந்தமிழர் வீரப் பண்பாடு . | இலட்சுமி வெளியீடு, 271, அறிஞர் அண்ணா நகர், மதுரை-625 020. |
| மலர்க மாநில சுயாட்சி .. | தங்கம் பதிப்பகம், கோபிச்செட்டிபாளையம். |
| தமிழர் ஆடைகள் .. | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-20. |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும். | |
| வள்ளல்கள் வரலாறு .. | ராஜ்மோகன் பதிப்பகம், த. பெ. 4955, தி.நகர், சென்னை-17. |
| தோன்றியது எப்படி (இரண்டு தொகுதிகள்). | வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-17. |
| மருத்துவம் பிறந்த கதை .. | வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-17. |
| கவிமணியின் கதை .. . | பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14. |
| வணக்கத்திற்குரிய வரதராசனார் கதை. | வசந்தா பதிப்பகம், 21, தர்மராசா கோயில் தெரு, ஆலந்தூர், சென்னை-16. |
| பறந்து செல்வோம் வாரீர் .. | செல்வ நிலையம், 53, முத்து முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை-14. |
| ஆனந்தனின் ஆசை .. .. | தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, ரங்கநாதன் தெரு, சென்னை-17. |
| பாதாள உலகின் பறக்கும் பாப்பா. | கல்வி பதிப்பகம், மனை எண். 5, விஸ்தரிப்பு 1, பரமேஸ்வரி நகர், அடையாறு, சென்னை-600 020. |
| அறிவியல் கதைகள் . .. | அன்பு இல்லம், சென்னை-600 014. |
| எலி பிடித்த பூனை .. .. | மீனாட்சி புத்தக நிலையம், 60, மேல கோபுரத் தெரு, மதுரை-625 001,. கிளை : 228, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-5. |

| எண் | தலைப்பு. | ஆண்டு. | பரிசு. நிலை, | பரிசு பெறும் நூலாசிரியர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 6 | தமிழ், தமிழ்ப் பண்பாடு பற்றிப் பிற மொழிகளில் வெளியான நூல்கள். | 1976 | I | திரு. இராம. பெரியகருப்பன், (தமிழண்ணல்). |
| | | | II | டாக்டர் எம். எம். உவைஸ் |
| 7 | பொறியியல் தொழில் நுட்பவியல். | 1976 | I | திரு. வே. கோவிந்தசாமி |
| 8 | தத்துவம், சமயம், அளவியல், அறவியல். | 1977 | I | திரு. ர. சு. நல்லபெருமாள் .. |
| | | | II | திரு. மா. சண்முக சுப்பிரமணியன். |
| | | 1978 | I | திரு. இரா. மாணிக்கவாசகம். |
| | | | II | திரு. சோ. சிவபாதசுந்தரம் .. |
| | | 1980 | I | திரு. கரு. நாகராசன் .. |
| 9 | நாடகம் | 1977 | I | திரு. பூவை. ஆறுமுகம் .. |
| | | 1978 | I | திரு. கோரா .. .. |
| | | | II | திரு. இந்திரா பார்த்தசாரதி .. |
| | | 1979 | I | திரு. க. பெருமாள் .. |
| | | | II | முனைவர் திரு. ப. கீரன் .. |
| 10 | கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுயசரிதை, பயண நூல்கள். | 1977 | I | திரு. ச. மெய்யப்பன் .. |
| | | 1978 | I | திரு. வே. தில்லைநாயகம் .. |
| | | | II | திரு. தமிலன் .. .. |

| பரிசுக்குரிய நூல். | பதிப்பகத்தின் பெயர். |
|---|---|
| (6) | (7) |
| Tradition and talent in Sangam Poetry. | மதுரை பப்ளிசிங் ஹவுஸ், 69, பாண்டிய வெள்ளாளர் தெரு, மதுரை-625 001. |
| Muslim Epics in Tamil literature. | செம்மல் பப்ளிகேஷன்ஸ், 2310, அண்ணா நகர், சென்னை-40. |
| ரேடியோ மெக்கானிசம் அண்டு ரிப்பேரிங். | ஜெமினி ரேடியோ டெலிவிஷன் இன்ஸ்டிடியூட், 13, அம்பர்சன் தெரு, சென்னை-600 001. |
| பிரும்ம இரகசியம் .. .. | வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-600017. |
| ஞானச் சுடர் .. .. .. | தமிழ்ப் புத்தகாலயம், 576, பாரதியார் சாலை, சென்னை-5. |
| நம்நாட்டுச் சித்தர்கள் .. .. | அன்னை அபிராமி அருள், 23/6, செல்லம்மாள் தெரு, சென்னை-30. |
| சேக்கிழார் அடிச்சுவட்டில் .. | வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-600017. |
| தமிழர் கண்ட மனம் .. .. | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-600 020. |
| இதோ ஒரு சீதாப்பிராட்டி .. | பொதிகை பதிப்பகம், 2, எட்டாவது ட்ரஸ்ட் குறுக்குத் தெரு, சென்னை-28. |
| மலைமடு .. .. .. | சிவகாமி பதிப்பகம், அண்ணாமலை நகர், 608 101. |
| ஔரங்கசீப் .. .. . | தமிழ்ப் புத்தகாலயம், 576, பாரதியார் சாலை, சென்னை-5. |
| பெரிய இன்பம் .. .. | வான்மழை பதிப்பகம், 20 புருசோத்தம முதலி தெரு, வள்ளுவர்கோட்டம், சென்னை 34. |
| தேர்க்கூட்டம் .. .. | வேணி வெளியீடு, தணிகை, 135, சாந்தி நகர், குரோம்பேட்டை, சென்னை-44. |
| தாகூர் .. .. | மணிவாசகர் நூலகம், சிதம்பரம், கிளை: 241, லிங்கிச் சேட்டித்தெரு, சென்னை-1. |
| இந்திய நூலக இயக்கம் .. | பாரி நிலையம், 59, பிராட்வே சென்னை-1. |
| காவல் துறையின் கதை .. | அருணோதயம், இராயப்பேட்டை, சென்னை-14 |

| எண் | தலைப்பு. | ஆண்டு. | பரிசு. நிலை. | பரிசு பெறும் நூலாசிரியர். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | 1980 | I | திரு. மா. சு. சம்பந்தன் .. |
| | | | II | திரு. மு. மு, இசுமாயில் .. |
| 11 | சிறுகதை | 1976 | I | திரு. சு. சமுத்திரம் .. .. |
| | | 1978 | I | திரு. பூவை. ஆறுமுகம் .. |
| | | | II | திரு. பிரதிபா ராசகோபாலன்.. |
| 12 | கல்வி, உளவியல் | 1978 | I | திரு. வ. அருணாசலம் .. |
| | | 1979 | I | திரு. நெ. சி. தெய்வசிகாமணி. |
| | | | II | திரு. மு. கோவிந்தராசன் .. |
| 13 | மருத்துவம், உடலியல், உணவியல், ஆரோக்கியம், சுகாதாரம். | 1979 | I | திரு. இ. எஸ். எஸ. இராமன்.. |
| | | | II | திரு. இரத்தின சண்முகனார் .. |
| 14 | கவின் கலைகள் | 1980 | I | திருமதி. கார்த்திகா கணேசன்.. |
| | | | II | டாக்டர் ஏ. என். பெருமாள் . |
| 15 | வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, கால்நடை மருத்துவம், | 1980 | I | திரு. செ. க. கோபால கிருஷ்ணன். |
| | | | I | திரு. அருணா இராசகோபால் திரு. கா. ஞா. சண்முகவேல் .. |

| பரிசுக்குரிய நூல். | பதிப்பகத்தின் பெயர். |
| --- | --- |
| (6) | (7) |
| அச்சும் பதிப்பும் | தமிழர் பதிப்பகம், 243, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-1. |
| இலக்கிய மலர்கள் | வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-17. |
| குற்றம் பார்க்கில் | கல்வி வெளியீடு, 48, ஆதம் சாயபு தெரு, சென்னை—600 013 |
| தெய்வம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது. | மீனாட்சி பதிப்பகம், 2/18 சத்தியமூர்த்தி நகர், நந்தனம், சென்னை-35. |
| ஒரு தேவதையின் பகல் நேரங்கள். | அருணோதயம், இராயப்பேட்டை, சென்னை-14. |
| தமிழில் ஆங்கில இலக்கணம | ஓம்ஸ் பதிப்பகம், 11, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-5. |
| ஆங்கிலம் பயில எளிய வழி | பைலட் பதிப்பகம், 81, ஐயப்பச் செட்டித் தெரு, சென்னை-1. |
| பயிற்றுப் பயிற்சியும், மொழியாசிரியர்களும் | திருமலைக்குமரன் பதிப்பகம் கூத்தங்குடி கீழபபடுகை அஞ்சல், விசயபுரம் வழி, தஞ்சை மாவட்டம். |
| நீரிழிவு நோயாளிக்கு வாழ்க்கை முறைகள். | விசாலாட்சி பதிபபகம, 7, இராமசாமி, நாயுடு கார்டன் தெரு, புதுப்பாக்கம், சென்னை 14. |
| உடம்பைக் காப்பாற்று | அருணோதயம், இராயப்பேட்டை, சென்னை-14. |
| காலந்தோறும் நாட்டியக் கலை | பாரி புத்தகப் பண்ணை, 58, டி. பி. கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5 |
| தமிழக நாட்டுப்புறக் கலைகள் | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-600 020. |
| கோழி பராமரிப்பு | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், சென்னை-98. |
| தோட்ட வளம் | பாப்புலர் புக் டெப்போ, 37, பாலாஜி சிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15. |

# I கவிதை

டாக்டர் சாலை இளந்திரையன்,
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
தில்லிப் பல்கலைக் கழகம்,
தில்லி.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த சாலைநயினார் பள்ளிவாசல் என்னும் ஊரில் 6—9—1930-ல் பிறந்தவர். கவிதை, கட்டுரை, திறனாய்வு, உரைவீச்சு ஆகிய வரிசைகளில் 37 நூல்களை எழுதியுள்ளார். இவர்தம் கவிதைகள், கட்டுரைகள், உரைவீச்சுகள் இந்தி, குசராத்தி, உருது ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. புரட்சி முழக்கம் என்னும் நூலுக்கு 1979-இல் தமிழக அரசு 'புரட்சிக் கவிஞர் பரிசு' வழங்கியுள்ளது. 'அறிவியக்கம்' என்னும் திங்களிதழுக்குச் சிறப்பாசிரியராக விளங்குகிறார்.

'உரைவீச்சு' எனும் நூலுக்கு 1975ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. மொ. ஆறுமுகம்,
(காவிரி நாடன்)
38, கலைமகள் நகர்,
ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை—600097.

திருச்சி மாவட்டம், கிழக்குத் தவுட்டுப்பாளையத்தில் 6—6—1939—இல் பிறந்தவர். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை வரிசைகளில் 20—க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 'அக்கினி சாட்சியாக' எனும் இவருடைய நாடக நூல் தமிழ்நாடு அரசின் பரிசைப் பெற்றுள்ளது.

'பூமழை' எனும் நூலுக்கு 1976 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. மு. மேத்தா, எம்.ஏ.,

தமிழ்த் துறை,

மாநிலக் கல்லூரி,

சென்னை-600 005.

மதுரை மாவட்டம், பெரியகுளத்தில் 5-9-1945-இல் பிறந்தவர். புதுக்கவிதை படைப்பாளர். கண்ணீர்ப் பூக்கள், மனச்சிறகு, வெளிச்சம் வெளியே இல்லை முதலிய 7 கவிதைத் தொகுப்புகளைப் படைத்துள்ளார். சிறுகதைத் தொகுதி ஒன்றையும், வரலாற்று நாவல் ஒன்றையும் எழுதியுள்ளார். ஆனந்தவிகடன நடத்திய சிறுகதைப் போட்டியிலும், நாவல் போட்டியிலும் முதற் பரிசு பெற்றுள்ளார்.

'ஊர்வலம்' எனும் நூலுக்கு 1977ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. வா. மு. சேதுராமன், எம்.ஏ.,

12, சாயி நகர்,

சென்னை-600 111.

இராமநாதபுரம் மாவட்டம், ஆண்டநாயகபுரத்தில் 9-2-1935-இல் பிறந்தவர். எண்ணச்சுடர், தாய்மண், தமிழ் முழக்கம், தாயுமானவர் அந்தாதி, வாழ்க நீ எம்மான், குழந்தைப் பாடல்கள் முதலிய 15 நூல்களை எழுதியுள்ளார். செந்தமிழ்க் கவிமணி, கவிஞர் குலத்திலகம் போன்ற பட்டங் களைப் பெற்றுள்ளார். இவர்தம் இலக்கியப் பணியைப் பாராட்டி 1977ஆம் ஆண்டில் உலகப் பல்கலைக் கழகம் இவ ருக்கு டாக்டர் பட்டம் அளித்துள்ளது. வெளிநாடுகள் சென்று வந்தவர்.

'தாய்மண்' எனும் நூலுக்கு 1976ஆம் ஆண்டின் இரண் டாம் பரிசையும், 'மலைநாட்டின் மீதினிலே' எனும் நூலுக்கு 1978ஆம் ஆண்டின் முதற் பரிசையும் பெறுகிறார்.

திரு. மு. பி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,
பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-600 030.

திருநெல்வேலி மாவட்டம், அய்யாபுரத்தில் 16–5–1939-இல் பிறந்தவர். 'பால பாரதிதாசன்' என்ற பட்டம் பெற்றவர். தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் முன்னாள் துணைத் தலைவர். இலக்கிய நெஞ்சம், கவிதை மேகங்கள், சிலைத்துப் பரணி முதலிய ஏழு நூல்களை எழுதியுள்ளார்.

'கவிதை மேகங்கள்' எனும் நூலுக்கு 1979ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. நா. காமராசன், எம்.ஏ.,
(கவிராஜன்),
16, எம்.ஐ.ஜி. பிளாக், கங்கா நகர்,
சென்னை-600 024.

புதுக்கவிதை படைப்பாளர். கறுப்பு மலர்கள், சூரிய காந்தி, சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் முதலிய 16 புதுக் கவிதைத் தொகுப்பு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர்தம் கவிதைகள் பல மொழிகளில், மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சூரியகாந்தி, கறுப்பு மலர்கள், சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் ஆகிய நூல்கள் பல்கலைக் கழக எம்.ஏ., மற்றும் புலவர் வகுப்புகளுக்குப் பாடமாக இடம்பெற்றவை.

'மலையும் ஜீவநதிகளும்' என்னும் நூலுக்கு 1980-ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. செங்கை அழகன்,
பாவலர் பாசறை,
சின்ன தெரு,
திம்மாவரம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

செங்கல்பட்டு மாவட்டம், திம்மாவரத்தில் 28–1–1942-இல் பிறந்தவர். நெஞ்சப் பூக்கள், செங்கை அழகன் கவிதைகள் ஆகியன இவருடைய கவிதை நூல்கள். பாசறைக் கவிதை, ஆயிரம் மலர்கள் ஆகியன தொகுப்பு நூல்கள்.

'செங்கை அழகன் கவிதைகள்' எனும் நூலுக்கு 1977ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

ஆலந்தூர் திரு. கோ. மோகனரங்கன், பி.லிட்.,

21, தருமராசா கோயில் தெரு,

ஆலந்தூர், சென்னை-600 016.

செங்கல்பட்டு மாவட்டம, ஆலந்தூரில் 1–6–1942-ல் பிறந்தவர். திருவள்ளூர் மணவாளநகர் தமிழ்க் கவிஞர் மன்றத்தின் சார்பில் திரு. நாராயணதுரைக்கண்ணன் அவர்களால் 'கவிவேந்தர்' எனும் பட்டம் அளிக்கப்பெற்றவர். கவிதை, நாடகம், நாவல், வாழ்க்கை வரலாறு, சிறுவர் இலக்கியம் ஆகிய பல துறைகளிலும் நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 1976ஆம் ஆண்டு குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய நாடகப் போட்டியில் இவருடைய 'பொன்னம்மா ஒரு புதுமைப் பெண்' எனும் நாடகம் முதற் பரிசு பெற்றுள்ளது.

'இமயம் எங்கள் காலடியில்' என்னும் நூலுக்கு 1977ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி,

5, சாரதாபுரம்,

மயிலாப்பூர்,

சென்னை-600 004.

தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் 19–5–1914-இல் பிறந்தவர். அரசியல் போராட்டங்கள் பலவற்றில் கலந்து கொண்டவர். அந்தமான் கைதி, கலைவாணன், என் காணிக்கை முதலிய நாடகங்களை எழுதியுள்ளார். பருவ மழை என்பது இவரின் கவிதைத் தொகுப்பாகும். இசைப் பாடல் நூல்களையும், திரைப்படங்கள் பலவற்றில் பல பாடல்களையும் எழுதியுள்ளார். 'அந்தமான் கைதி' நாடகத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசையும், இயல் இசை நாடக மன்றத்தால் 'கலைமாமணி' பட்டத்தையும் பெற்றுள்ளார்.

'பருவ மழை' என்னும் நூலுக்கு 1978ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

திரு. இரா. முத்துராமலிங்கம் (இளந்தேவன்)

எம்.ஏ., பி.எஸ்சி., பி.டி.,

284, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,

சென்னை-600005.

மதுரை மாவட்டம், கம்பத்தில் 25–6–46-ல் பிறந்தவர். இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் 'புகாரில் ஒரு நாள்' எனும் தலைப்பில் நடந்த கவிதைப் போட்டியில் நான்காம் பரிசைப் பெற்றவர். இந்திப் பரணி, கனவு மலர்கள், இளந்தேவன் கவிதைகள், வெளிச்ச விரல்கள் ஆகியன இவருடைய படைப்புகள்.

**'கனவு மலர்கள்'** எனும் நூலுக்கு 1979 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

திரு. அரங்க. சீனிவாசன்,

கோவிலூர் அஞ்சல்,

திண்டுக்கல் வழி.

இரங்கூனில் 29–9–1920-இல் பிறந்தவர். சமய, இலக்கியக் கழகங்களில் பாராட்டும் பண முடிப்பும் பெற்றவர். சமயம், இலக்கியம், வரலாறு, தேசியம் ஆகிய துறைகளில் எழுதியுள்ளார். 'காந்தி காதை' என்பது இவர் எழுதியுள்ள பெருங்காப்பியமாகும்.

**'காந்தி காதை'** எனும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

## II-நாவல்

திரு, பொன்னீலன்,

குழித்துறை, குமரி மாவட்டம்.

ஊற்றில் மலர்ந்தது, கொள்ளைக்காரர்கள் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

'கரிசல்' என்னும் நூலுக்கு 1976 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. வாசவன்

'மண்ணின் மணம்' என்னும் நூலுக்கு 1977 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திருமதி கமலா சடகோபன்,

36, சுங்கராச்சாரி தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

பத்தொன்பதாம் வயதில் இருந்தே கதை எழுதத் தொடங்கியவர். புகழ் பெற்ற தமிழ் நாவலாசிரியராகிய திருமதி கோதைநாயகி அவர்களோடு பழகி, அவருடைய 'ஜகன் மோகினி''யில் பணி புரிந்துள்ளார். கலைமகள் நடத்திய நாராயணசாமி அய்யர் நினைவு நாவல் போட்டியில் முதல் பரிசு பெற்றவர். இதுவரை 40 சிறு கதைகளும், நான்கு நாவல்களும், நான்கு குறு நாவல்களும் எழுதியுள்ளார். தற்பொழுது மங்கையர் மலரில் துணை ஆசிரியராகப் பணி புரிகின்றார்.

'படிகள்' என்னும் இவருடைய நூல் 1978 ஆம் ஆண்டிற்கான முதல் பரிசைப் பெறுகிறது.

டாக்டர் பொன். சௌரிராசன், எம்.ஏ., பிஎச்.டி.,

தமிழ்த் துறைத் தலைவர்,

திருவேங்கடவன் பல்கலைக் கழகம்,

திருப்பதி, ஆந்திர மாநிலம்.

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த சிக்கலில் 6—4—1932 இல் பிறந்தவர். சித்திரச் சிலம்பு, கட்டுரை மணிகள் ஆகிய ஆராய்ச்சி நூல்களைத் தமிழிலும், தாயுமானவர் பற்றிய ஆய்வு நூலை ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். மேலும் சிறுகதை நூல்கள் இரண்டும், நாவல்கள் இரண்டும், மொழி பெயர்ப்பு நூல்கள் இரண்டும், ஒப்பியல் நூல் ஒன்றும் எழுதியுள்ளார்.

'தாயகம்' என்னும் நூலுக்கு 1979 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. சு. சமுத்திரம், பி. ஏ.,

113, மைய அரசு ஊழியர் குடியிருப்பு,

பெசண்ட் நகர்,

சென்னை - 600 090.

திருநெல்வேலி மாவட்டம், திப்பணம்பட்டியில் 15—12—1941-இல் பிறந்தவர். பல சிறுகதைகள், நாவல்கள், நாடகம், ஆகியவற்றை எழுதியுள்ளார். பல மொழிகளில் இவர்தம் சிறு கதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 'போதும் உங்க உபகாரம்'', 'ஒரே ஒரு ரோஜா, ஆகிய இவரின் சிறு கதைகள் 1976, 1977 ஆம் ஆண்டுகளின் சிறந்த சிறு கதைகள் என்று மைய சமூக நல அமைச்சகத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டன. இவர்தம் படைப்புகளில் சில, பள்ளிகள், கல்லூரிகளில் பாட நூல்களாகவும் உள்ளன. 'ஒரு கோட்டுக்கு வெளியே' என்னும் இவருடைய நாவல் நாடகமாக்கப்பட்டு 14 மொழிகளில் எல்லா வானொலி நிலையங்களாலும் ஒலி பரப்பப்பட்டுள்ளது.

'ஊருக்குள் ஒரு புரட்சி' என்னும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. பண்ணன்

'பிராமணன் இங்கே' எனும் நூலுக்கு 1977 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

திரு. ஜே. எம். சாலி, எம். ஏ.,

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர். மாணவப் பருவத்திலிருந்து எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ளவர். சிங்கப்பூர் தமிழ் முரசு நாளிதழில் ஏழு ஆண்டுகளும், ஆனந்த விகடன் இதழில் 10 ஆண்டுகளும் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர். பதிப்பாளராகவும், செயற்பட்டு வருகிறார். இதுவரை முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

'கனாக் கண்டேன் தோழி' எனும் நூலுக்கு 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர் இராம. பெரியகருப்பன்,
எம். ஏ., பிஎச். டி.,
தமிழியல் துறை,
மதுரைப் பல்கலைக் கழகம்,
மதுரை.

இராமநாதபுர மாவட்டம், நெற்குப்பையில் 12—8—1928 இல் பிறந்தவர். குன்றக்குடி ஆதீனத்தால் 'கணக்காயர்' என்ற பட்டம் வழங்கப் பெற்றவர். 'மீனாட்சி' என்னும் கவிதைக்குத் தமிழக அரசின் பொற்கிழி பெற்றவர். சங்க இலக்கிய ஒப்பீடு முதலிய 16 நூல்களை எழுதியுள்ளார்.

'நச்சு வளையம்' என்னும் நூலுக்கு 1979ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

திரு. மாரி. அறவாழி
43, பாலாறு தெரு,
பாரத் நகர்,
ஆதம்பாக்கம், சென்னை-600 088.

சேலத்தில் 1935 ஆம் ஆண்டில் பிறந்தவர். 500-க்கு மேற்பட்ட சிறு கதைகளையும், 25 புதினங்களையும் எழுதியுள்ளார். பிற மொழிகள் சிலவற்றிலும் இவருடைய சிறு கதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அறிஞர் அண்ணா இவருடைய சிறு கதையை மேற்கோள் காட்டிச் சென்னைப் பொதுக் கூட்டத்தில் பேசியுள்ளார். பாவேந்தர் தமது 'குயில்' இதழில் இவருடைய கதையை வெளியிட்டுள்ளார்.

'கோடுகளும் புள்ளிகளும்' என்னும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

## III-மொழி இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்

திரு. மறை. திருநாவுக்கரசு

தனித் தமிழ் இயக்கம் கண்ட பேரறிஞர். மறைமலையடிகளாரின் மகனாவார். ''திருமுறைச் செல்வர்'', ''சித்தாந்த தினகரன்'' ஆகிய பட்டப் பெயர்களைப் பெற்றவர். தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சீரிய புலமை படைத்தவர்.

இவருடைய **பெரியபுராண ஆய்வுரை** எனும் நூல் 1975 ஆம் ஆண்டுக்கான முதற் பரிசைப் பெறுகிறது.

டாக்டர் **எம். எம். உவைஸ்**

பேராசிரியர்,

இசுலாமியத் தமிழ் இலக்கியம்,

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,

மதுரை - 625 021.

இலங்கை -களுத்துறை பாணந்துறையில் 18-1-1922 இல் பிறந்தவர். இசுலாமியத் தென்றல், நம்பிக்கை, நதியும், நியாயமும் முதலிய பல நூல்களை எழுதியுள்ளார் தமிழ் இலக்கியத்துக்கு முஸ்லீம்கள் ஆற்றிய தொண்டுகள், இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள் என்னும் நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். தமிழில் நான்கு நூல்களையும், சிங்களத்தில் ஐந்து நூல்களையும் மொழி பெயர்த்துள்ளார். குதுபுநாயகம், இராஜநாயகம், என்னும் நூல்கட்கு உரை எழுதியுள்ளார். நான்கு நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

**'இஸ்லாமும் இன்பத் தமிழும்'** எனும் நூலுக்கு 1976 ஆம் ஆண்டின் முதலாம் பரிசைப் பெறுகிறார்

டாக்டர் சொ. ந. கந்தசாமி, எம். ஏ.,
பிஎச். டி.,

இலையூர்,
ஜெயங்கொண்ட சோழபுரம்,
உடையார்பாளையம்,
திருச்சி மாவட்டம்.

திருச்சி மாவட்டம், இலையூரில் 15—12—1936 இல் பிறந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல பரிசுகளைப் பெற்றவர். மலேசியாவில் கோலாலம்பூரில் தமிழ்ப் பேராசிரியராய் உள்ளவர். புரட்சிக் காப்பியம், தொல்காப்பியத் தெளிவு, குறுந்தொகைத் திறனாய்வு முதலிய 14 ஆய்வு நூல்களையும், அழகு முல்லை என்னும் கவிதைத் தொகுப்பையும், நான்கு ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார்.

'திருக்குறள் கூறும் உறுதிப் பொருள்' எனும் இவருடைய நூல் 1977 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகின்றது.

டாக்டர் பி. முத்துகண்ணப்பர், எம்.ஏ., பிஎச்.டி.

டாக்டர் முத்துகண்ணப்பர் நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் பொருந்திய தமிழ் அறிஞர். இலக்கியப் பழமையும் ஆய்வுப் புதுமையும் கலந்த ஆய்வாளர்.

'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்' எனும் இவருடைய நூல் 1978 ஆம் ஆண்டிற்கான முதல் பரிசைப் பெறுகின்றது.

டாக்டர் மா. செல்வராசன், எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்த் துறை,
சென்னை-5.

செங்கற்பட்டு மாவட்டம், மானாம்பதியில் 21—6—1946-ல் பிறந்தவர். பாரதிதாசன் கனல்கள், பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர் ஆகிய ஆராய்ச்சி நூல்களையும், வைகறை மலர்கள் எனும் கவிதை நூலையும், செம்புலப் பெயல் நீர் என்ற கருத்துத் தொகுப்பு நூலையும் எழுதியுள்ளார்.

'பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர்' என்னும் நூலுக்கு 1979 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. ஜி. ஜான்சாமுவேல், எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ.,
(ஆங்கிலம்)
நெய்யூர்,
குமரி மாவட்டம்.

கன்னியாகுமரி மாவட்டம், நெய்யூரில் 2—4—1946-ல் பிறந்தவர். திறனாய்வு, இலக்கியம், ஒப்பாய்வு தொடர்பான 10 நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்.

'**ஷெல்லியும் பாரதியும்**' என்னும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர் கதிர். மகாதேவன்,
இணைப் பேராசிரியர்,
தமிழியல் துறை,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை-625 021.

தென்னார்க்காடு மாவட்டம், கடலூரில் 15—9—1936-ல் பிறந்தவர். ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம், பழந்தமிழர் வீரப் பண்பாடு, Cultural Heritage of Ancient Tamils என்னும் நூல்களை எழுதியுள்ளார்.

'**பழந்தமிழர் வீரப் பண்பாடு**' என்னும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர் சு. பாலச்சந்திரன், எம்.ஏ., எம் லிட்., பிஎச்.டி.
இளநிலைப் பேராசிரியர்,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-600 005.

இராமநாதபுர மாவட்டம், இராசபாளையத்தில் 15-6-1938-ல் பிறந்தவர். அமெரிக்க ஐக்கிய நாட்டுப் பல்கலைக் கழகங்களில் ஐந்து திங்கள் 'யுனெஸ்கோ' ஆராய்ச்சியாளராக இருந்துள்ளார். இலக்கியத் திறனாய்வு, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை—ஒரு திறனாய்வு, அயல் நாடுகளில் என் அனுபவங்கள் ஆகிய நூல்களையும், இருபது ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

**'இலக்கியத் திறனாய்வு' எனும் இவரது நூல் 1976 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகின்றது.**

டாக்டர் மா. இராமலிங்கம், எம்.ஏ.,
தமிழ் துறைத் தலைவர்,
அரசுக் கல்லூரி,
கும்பகோணம்,
தஞ்சை மாவட்டம்.

இவர் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த மன்னார்குடியில் 1939 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாளில் பிறந்தவர். தந்தையார் பெயர் திரு. மாணிக்கம்.. எழில் முதல்வன் என்ற புனைப் பெயரைக்கொண்டவர். நாவல், இலக்கியம், இருபதாம் நூற்றாண்டு · தமிழ் இலக்கியம், புனை கதை வளம், அகிலனின் கலையும் கருத்தும், புதிய உரைநடை, இலக்கியத் தகவு ஆகிய நூல்களை எழுதியுள்ளார். புதிய உரைநடை என்னும் இவருடைய நூலுக்கு சாகித்திய அகாடமி பரிசு வழங்கியுள்ளது.

இவர் எழுதியுள்ள '' விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள் '' என்னும் நூல் 1977 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசினைப் பெறுகிறது.

திரு. ப. நீலகண்டன்,
தமிழ்நாடு அரசு திரைப்பட-தொலைக்காட்சி
தொழில் நுட்பவியல் நிலையம்,
அடையாறு, சென்னை-600 020.

இளமையிலிருந்தே காந்தீயக் கொள்கைகளை மனதில் ஏற்று தேசீய உணர்வில் திளைபவர்; பத்திரிகை ஆசிரியராக இருந்து, பயனுள்ள இலக்கியப் படைப்புக்களைப் படைத்தவர். முப்பதாண்டுகளுக்கு மேலாகத் திரையுலகில் கதை, வசனம் எழுதுபவராகவும், இயக்குநராகவும் பணியாற்றி வருபவர்; ஐம்பதுக்கு மேற்பட்ட திரைப் படங்களை உருவாக்கியவர்; ' சிறந்த இயக்குநர் ' என்ற தமிழக அரசின் விருதையும், ' கலைமாமணி ' பட்டத்தையும் பெற்றவர்.

' வண்ணப் பூக்கள் ' (மூன்று தொகுதிகள்) என்னும் நூலுக்கு 1979 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர் ச. சு. இளங்கோ, எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்த் துறைத் தலைவர்,
நிசலிங்கப்பா கல்லூரி,
பெங்களூர்,
கருநாடக மாநிலம்.

பாரதிதாசன் கதைப் பாடல்கள் எனும் பொருள் குறித்து ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். கையெழுத்துப் படிவங்களாக விளங்கும் கதைப் பாடல்களைத் தேடிக் கண்டு பிடித்து, தமிழ் இலக்கிய உலகுக்கு வழங்கியுள்ளார்.

'பாரதிதாசனின் கதைப் பாடல்கள்' எனும் இவருடைய நூல் 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகின்றது.

## IV-மானிடவியல், சமூகவியல், பூகோளம், அரசியல், சட்டம்

திரு. கு. ச. ஆனந்தன், பி.காம்.,பி.எல்.

வழக்குரைஞர்,

பாரதி வீதி,

கோபிச்செட்டிபாளையம்-638 452,

பெரியார் மாவட்டம்.

பெரியரார் மாவட்டம்,புஞ்சைப்புளியம்பட்டியில் 6—5—1933-இல் பிறந்தவர். 'குறளியம்' என்ற திங்களிதழின் சிறப்பாசிரியர். திருக்குறள் ஒரு சமுதாய நூல் எனும் அடிப்படையில் ஆய்ந்து எழுதுபவர். மலர்க மாநில சுயாட்சி, ஈந்தி..யா ? இந்தியாவா திருக்குறளின் திறவுகோல் முதலிய 6 நூல்களை எழுதியுள்ளார்.

'மலர்க மாநில சுயாட்சி' என்னும் நூலுக்கு 1975 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர். கே. பகவதி, எம்.ஏ., பிஎச். டி.,

கன்னியாகுமரி மாவட்டம், இரணியலில் 2—6—1950-இல் பிறந்தவர். தமிழர் ஆடைகள், தொல்காப்பியம்-மரபியல் உரைவளம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

'தமிழர் ஆடைகள்' என்னும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர். க. காந்தி., எம்.ஏ., பிஎச். டி.,

இராமநாதபுரம் மாவட்டம், முதலூரில் 7—6—1947-இல் பிறந்தவர். தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் எனும் நூலை எழுதியுள்ளார்.

'தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்' எனும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

## V. குழந்தை இலக்கியம்.

திரு. வே. தில்லைநாயகம், எம்.ஏ., எம்.எல்.எஸ்., பி.டி.

மதுரை மாவட்டம், சின்னமனூரில் 15—7—1925-இல் பிறந்தவர். அரசரும் புலவரும், நூலகப் பணி, நூலக உணர்வு, வள்ளல்கள் வரலாறு முதலிய நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய ' நூலக உணர்வு ' எனும் நூல் தமிழக அரசின் பரிசைப் பெற்ற நூலாகும்.

'வள்ளல்கள் வரலாறு' எனும் நூலுக்கு 1975 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. வாண்டுமாமா,
(கௌசிகன்)

' தோன்றியது எப்படி ' (இரண்டு தொகுதிகள்) எனும் நூலுக்கு 1976 ஆம் ஆண்டின் முதற் பரிசையும், ' மருத்துவம் பிறந்த கதை ' எனும் நூலுக்கு 1977 ஆம் ஆண்டின் முதற் பரிசையும் பெறுகிறார்.

ஆலந்தூர் திரு. கோ. மோகனரங்கன்.

' வணக்கத்திற்குரிய வரதராசனார் கதை ' என்னும் நூலுக்கு 1978 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. வெ. நல்லதம்பி, எம். ஏ.,
மனை எண் 81
3-ஆவது கிழக்கு தெரு,
திருவான்மியூர் வீடு கட்டும் திட்டம்,
சென்னை-600 041

திருச்சி மாவட்டம், செட்டியபட்டியில் 1—6—1936-இல் பிறந்தவர். அழகு நிலா, சிறுவர்க்கேற்ற சிறுகதைகள், புதுமைக் கதைகள், ஆனந்தனின் ஆசை, புதையல், டி. வி. நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவது எப்படி? என்னும் நூல்களை எழுதியுள்ளார். சென்னை வானொலியில் ஆறு ஆண்டுக்காலம் வானொலி அண்ணாவாகப் பணியாற்றியவர். அமெரிக்க வானொலியில் இரண்டாண்டுகள் தமிழ்ப்பணி புரிந்தவர். குழந்தை இலக்கியப் பணிக்காக "விஸ்டம்" அனைத்து நாட்டுத் திங்களிதழின் கேடயம் பெற்றுள்ளார்.

"ஆனந்தனின் ஆசை" என்னும் நூலுக்கு 1979 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. தமிழன்,
106, வெங்கடாசல முதலி தெரு,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004.

தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் 15–8–1902-இல் பிறந்தவர். பல இடங்களில் ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார். இவர் 40 நகைச்சுவை நூல்களையும், 11 சிறு கதைத் தொகுதிகளையும், 10 சிறுவர் கதைத் தொகுதிகளையும், பெண்களுக்கான இரண்டு கட்டுரைத் தொகுதிகளையும், அரசியல் தொடர்பான நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் ஆகியவற்றையும் எழுதியுள்ளார்.

'அறிவியல் கதைகள்' என்னும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. கே. பி. நீலமணி.

" கவிமணியின் கதை" என்னும் நூலுக்கு 1977-ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

திரு. பி. எல். இராசேந்திரன்.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில் 7—1—1941 ஆம் நாளன்று பிறந்தவர். தந்தையார் பெயர் திரு. இரா. இலக்குமணன். தாயார் பெயர் திருமதி பட்டம்மாள். இவர் எழுதிய முதல் நாவல் மஞ்சள் புடவை, குயில், கலைஞன், தாய்நாடு, கலை. தமிழ்நாடு, மாலைமணி, சமநீதி, முரசொலி ஆகிய ஏடுகளில் பணிபுரிந்துள்ளார். இதுவரை 40 நூல்கள் எழுதியுள்ளார். தற்போது தமிழ்நாடு அரசின் தமிழரசு இதழில் செய்தியாளராகப் பணிபுரிந்து வருகிறார்

"பறந்து செல்வோம் வாரீர்" எனும் இவருடைய நூல் 1978ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பரிசைப் பெறுகின்றது.

கல்வி கோபாலகிருஷ்ணன்

" பாதாள உலகில் பறக்கும் பாப்பா " என்னும் நூலுக்கு 1979 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

திரு. குழ. கதிரேசன்

" எலி கடித்த பூனை " என்னும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

## VI. தமிழ், தமிழ்ப் பண்பாடு பற்றிப் பிற மொழிகளில் வெளியான நூல்கள்.

டாக்டர் இராம., பெரியகருப்பன்
(தமிழண்ணல்)
தமிழியல் துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

"Tradition and talent in sangam poetry" என்னும் நூலுக்கு 1976 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர் எம், எம்; உவைஸ்
பேராசிரியர்
இசுலாமியத் தமிழ் இலக்கியம்
மதுரை—காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை—625 021.

இலங்கை களுத்துறை பாணந்துறையில் 18—1—1922-இல் பிறந்தவர். இசுலாமியத் தென்றல், நம்பிக்கை, நீதியும் நியாயமும் முதலிய நூல்களை எழுதியுள்ளார். தமிழ் இலக்கியத்துக்கு முஸ்லீம்கள் ஆற்றிய தொண்டுகள், இஸ்லாமியக் தமிழ்க் காப்பியங்கள் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். தமிழில் நான்கு நூல்களையும், சிங்களத்தில் அய்ந்து நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார். குதுபுநாயகம், இராஜநாயகம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். நான்கு நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

"Muslim Epics in Tamil Litera ure" என்னும் நூலுக்கு 1976 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

## VII. பொறியியல், தொழில் நுட்பவியல்.

திரு. வே. கோவிந்தசாமி.

தஞ்சை மாவட்டம், திருப்பூண்டியில் 27—5—1931-இல் பிறந்தவர். ரேடியோ மெக்கானிசம் அண்டு ரிப்பேரிங், டேப் ரிக்கார்டர் மெக்கானிசம் அண்டு ரிப்பேரிங், டெலிவிசன் மெக்கானிசம் அண்டு ரிப்பேரிங் முதலிய 11 நூல்களை எழுதியுள்ளார்.

" ரேடியோ மெக்கானிசம் அண்டு ரிப்பேரிங் " எனும் நூலுக்கு 1976 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

## VIII. தத்துவம், சமயம், அளவியல், அறவியல்.

திரு. ர. சு. நல்லபெருமாள், பி.ஏ. பி.எல்.
21, போலீஸ் ஸ்டேஷன் தெரு,
பாளையங்கோட்டை—627 002.

திருநெல்வேலி மாவட்டம், கடையத்தில் 15—12—1931 இல் பிறந்தவர். கல்லுக்குள் ஈரம், நம்பிக்கைகள் முதலிய 7 நாவல்களையும், சங்கராபரணம், இதயம் ஆயிரம் விதம் என்ற 2 சிறுகதைத் தொகுப்புகளையும், வரலாறு, தத்துவம் தொடர்பான 3 நூல்களையும் எழுதியுள்ளார். சிந்தனை வகுத்த வழி, கல்லுக்குள் ஈரம் ஆகிய இவருடைய இரண்டு நூல்களும் தமிழ்நாடு அரசின் பரிசைப் பெற்றுள்ளன.

" பிரும்ம இரகசியம் " என்னும் நூலுக்கு 1977 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர் இரா. மாணிக்கவாசகம், எம்.ஏ.,
எம்.லிட்., பிஎச்.டி.,
9, செல்லம்மாள் தெரு,
சென்னை—600 030.

சென்னை மாநகரில் 14—10—1943-இல் பிறந்தவர். சித்தர்களின் நூல்களைப் பல்வேறு கோணங்களில் ஆய்பவர். "தமிழ்ச் சித்தர்கள் கலைக் களஞ்சியம்" தொகுத்து வருபவர். நம் நாட்டுச் சித்தர்கள், சித்தர்கள் கண்ட சிறுநீர் மருத்துவம், சித்தர்கள் பரிபாஷை அகராதி, திருமந்திர ஆய்வு என்னும் நூல்களை எழுதியுள்ளார்.

"நம் நாட்டுச் சித்தர்கள்" என்னும் நூலுக்கு 1978 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. கரு. நாகராசன், எம்.ஏ.,

இராமநாதபுரம் மாவட்டம், வெளியக்கோட்டையில், 7-9-1947-ல் பிறந்தவர். சிறு கதைகள் மற்றும் வானொலி நாடகங்களைப் பல இதழ்களிலும் வானொலி நிலையங்களிலும் இடம்பெறச் செய்துள்ளார். "ராணி" இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றுள்ளார். தமிழே எல்லாம், பாரதியின் கனவுகள் என்னும் கவிதை நூல்களையும் மற்றும் ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார்.

"தமிழர் கண்ட மனம்" எனும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

**திரு. மா. சண்முக சுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்.**

***வழக்குரைஞர்,***

***3084, அண்ணா நகர்,***

***சென்னை-600 040.***

*திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் 15—8—1922-ல் பிறந்தவர். தமிழ்நாடு சட்டப் பேரவைத் துறையின் முன்னாள் செயலாளர், சட்ட இயல், குற்ற இயல் சட்டம், குறள் கூறும் சட்ட நெறி, ஞானச் சுடர் முதலிய நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய 'குற்றமும் தண்டனையும்' என்ற நூல் நடுவணரசின் பரிசைப் பெற்றுள்ளது. தீங்கியல் சட்டம், சட்டத் தமிழ் ஆகிய நூல்களும், நேரு மாமா, சிங்கத் தமிழர் சிதம்பரனார் ஆகிய சிறுவர்களுக்குரிய நூல்களும் மாநில அரசின் பரிசுகளைப் பெற்றுள்ளன.*

*'**ஞானச் சுடர்**' என்னும் **நூலுக்கு** 1977 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.*

**திரு. சோ. சிவபாதசுந்தரம், பி.ஏ.**

*யாழ்ப்பாணத்தைச் சார்ந்த கரம்பொன் என்ற **ஊரில்** 1912 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27 ஆம் நாள் பிறந்தவர். தந்தையார் பெயர் திரு. சோமசுந்தரம். மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில், ஒலிபரப்புக் கலை, கௌதம புத்தர் அடிச்சுவட்டில் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். கௌதம புத்தர் அடிச்சுவட்டில் எனும் இவருடைய நூல் இலங்கை அரசின் பரிசைப் பெற்றுள்ளது. இலண்டன் பி.பி.சியில் தமிழோசை நிகழ்ச்சியினைத் துவக்கி நடத்தியவர். தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.*

*'**சேக்கிழார் அடிச்சுவட்டில்**' எனும் இவருடைய நூல் 1978 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பரிசைப் பெறுகின்றது.*

## IX நாடகம்.

திரு. பூவை எஸ். ஆறுமுகம், பி.ஏ.,
3, ஆனந்தா சாலை,
ஆழ்வார்ப்பேட்டை,
சென்னை-600 018.

புதுக்கோட்டை மாவட்டம், பூவைமாநகரில் 31-1-1926-இல் பிறந்தவர். 'ஏலக்காய்' ஏட்டின் துணையாசிரியர். இலக்கியத்தின் பல்வேறு துறைகளில் ஏறக்குறைய 100 நூல்களை எழுதியுள்ளார். 'மகுடி' என்னும் ஓரங்க நாடகத்திற்கு ஆனந்தவிகடனின் முதற் பரிசையும், பூவையின் கதைகள் என்னும் நூலுக்குத் தமிழக அரசின் முதற் பரிசையும் பெற்றுள்ளார்.

'இதோ ஒரு சீதாப் பிராட்டி' என்னும் நூலுக்கு 1977 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர். கோ, ராஜசுந்தரம்,
எம்.ஏ., எம்லிட்., பிஎச் டி.,
(கோரா),
அண்ணாமலை நகர்,
சிதம்பரம்.

தென்னார்க்காடு மாவட்டம், நாட்டார்மங்கலத்தில் 24—2—1938-ல் பிறந்தவர். 12 நாடக நூல்கள் எழுதியுள்ளார்.

'மலைமடு' என்னும் நூலுக்கு 1978 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. க. பெருமாள், எம்.ஏ.,
20, ஐந்தாவது தெரு,
வள்ளுவர் கோட்டம்,
சென்னை-600 034.

வட ஆர்க்காடு மாவட்டம், வெள்ளையகவுண்டனூரில் 5—2—1922-இல் பிறந்தவர். பல கல்லூரிகளில் தமிழ்த் துறைத் தலைவராகவும் முதல்வராகவும் பணியாற்றியவர். இன்ப வெள்ளம், மாபெரும் அறம், பெரிய வெற்றி, ஆணவத் திரு விளையாடல் முதலிய ஏழு நூல்களை எழுதியுள்ளார்.

'பெரிய இன்பம்' என்னும் நூலுக்கு 1979 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர். ஆர். பார்த்தசாரதி, எம்.ஏ., பிஎச். டி.,
(இந்திரா பார்த்தசாரதி)
தமிழ்த் துறை,
டில்லி பல்கலைக் கழகம்.

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியில் 10—7—1930-ல் பிறந்தவர். 10 நாவல்களையும், இரண்டு குறுநாவல் தொகுப்பு களையும், இரண்டு சிறு கதைத் தொகுதிகளையும் இரண்டு நாடகத் தொகுப்புகளையும் எழுதியுள்ளார். இவரது படைப்பு களில் பல பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 'குருதிப் புனல்' என்னும் நாவலுக்கு நடுவணரசின் சாகித்ய அகா தமி பரிசையும், 'சுதந்திர பூமி' என்னும் நாவலுக்குத் தமிழ் நாடு அரசின் இரண்டாம் பரிசையும் பெற்றுள்ளார்.

'ஔரங்கசீப்' என்னும் நாடகத்திற்கு 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

திரு. மனசை ப. கீரன், பி.ஏ., பி.டி.,
"தணிகை",
135, சாந்தி நகர்,
குரோம்பேட்டை, சென்னை-600 044.

வட ஆர்க்காடு மாவட்டம், மன்சுராபாத்தில் 24—4—1938-இல் பிறந்தவர். வானொலியில் 1976 முதல் கல்வி நிகழ்ச்சி அமைப் பாளராக பணிபுரிந்து வருகிறார். கடை திறக்கலாம், கவிதைப் பாலம், உயிர்ப் பொம்மை முதலிய கவிதைகளையும், 'நாடும் ஏடும்', உலகச் சந்தை என்னும் நாடகங்களையும் மற்றும் கட்டுரைகள், சிறு கதைகளையும் எழுதியுள்ளார்.

'தேர்க்கூட்டம்' என்னும் நூலுக்கு 1979 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

## X-கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுயசரிதை, பயண நூல்கள்.

திரு. ச. மெய்யப்பன், எம்.ஏ.,

புதுக்கோட்டை மாவட்டம் இராமச்சந்திரபுரத்தில் 21—6—1933-ல் பிறந்தவர். பதிப்பாசிரியராக இருந்து 150 நூல்களை வெளியிட்டிருக்கிறார். தாகூர், கபிலர், புதிய ஆத்திச்சூடி-12, அறவியல் சூடி ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

'தாகூர்' என்னும் நூலுக்கு 1977 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. வே. தில்லைநாயகம்,

'இந்திய நூலக இயக்கம்' என்னும் நூலுக்கு 1978 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. தூமிலன்

"காவல் துறையின் கதை" என்னும் நூலுக்கு 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.



154B-19—6

திரு. மா. சு. சம்பந்தன்,

243, லிங்கிச் செட்டித் தெரு,

சென்னை - 600 001.

சென்னை மாநகரில் 25—5—1923—இல் பிறந்தவர். தமிழ் எழுத்தாளர் சங்கத்திலும், பல அமைப்புகளிலும் பணியாற்றியவர். சென்னை மாநகராட்சியின் முன்னாள் உறுப்பினர். எங்கள் நாடு, தமிழர் மலர், முருகு, மதி ஆகிய திங்களிதழ்களில் ஆசிரியராகப் பணி புரிந்தவர். பல நூல்களைப் பதிப்பித்தவர். சிறந்த பேச்சாளர், சென்னை மாநகர், அச்சுக் கலை முதலிய 6 நூல்களை எழுதியுள்ளார்.

'அச்சும் பதிப்பும்' என்னும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

நீதிபதி மு.மு. இஸ்மாயில்

தமிழிலக்கியத் துறையில் பல்வேறு கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளவர். சென்னை உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாய் விளங்கியவர். கம்ப இராமாயணம் மற்றும் சமய இலக்கியங்களில் ஆழ்ந்த பற்றுடையவர்.

'இலக்கிய மலர்கள்' என்னும் நூலுக்கு 1980 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

## XI-சிறுகதை

திரு. சு. சமுத்திரம்

'குற்றம் பார்க்கில்' என்னும் நூலுக்கு 1976 ஆம் ஆண்டின முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. பூவை எஸ். ஆறுமுகம், பி.ஏ.,
3, ஆனந்தா சாலை,
ஆழ்வார்ப்பேட்டை,
சென்னை - 600 018.

'தெய்வம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது' என்னும் நூலுக்கு 1978 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. பிரதிபா ராசகோபாலன்

'ஒரு தேவதையின் பகல் நேரங்கள்' என்னும் நூலுக்கு 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

## XII-கல்வி, உளவியல்

திரு. வ. அருணாசலம்,
ஓம்ஸ் பதிப்பகம்,
18, பச்சையப்ப செட்டித் தெரு,
சென்னை-600 002.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் 7–6–1920-ல் பிறந்தவர். ரேடியோ மெக்கானிசம், டேப் ரிக்கார்ட் மெக்கானிசம், தமிழில் ஆங்கில இலக்கணம் முதலிய 12 நூல்களை எழுதியுள்ளார். எலக்ட்ரிகல் இன்ஜினியரிங், டிரான்சிஸ்டர் ரிப்பேரிங் ஆகிய இரு நூல்களும் மாநில அரசின் பரிசுகளைப் பெற்றுள்ளனவாகும்.

'தமிழில் ஆங்கில இலக்கணம்' என்னும் நூலுக்கு 1978 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. நெ. சி. தெய்வசிகாமணி,
6, நல்லதம்பி செட்டித் தெரு,
அண்ணாசாலை,
சென்னை-600 002.

1929-ல் பிறந்தவர். குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவராயிருந்தவர். அச்சங்கத்தினரால் கேடயம் வழங்கப் பெற்றவர். பரமன் அருள், பளிங்கு மண்டபம், எங்கள் குடும்பம், சத்ரபதிக்கோட்டை முதலிய 70 நூல்களை எழுதியுள்ளார்.

'ஆங்கிலம் பயில எளிய வழி' எனும் நூலுக்கு 1979 ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. மு. கோவிந்தராசன் எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,

தஞ்சை மாவட்டம், கூத்தங்குடியில் 7–3–1936-இல் பிறந்தவர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் அமைப்புக் குழுக்கள் சிலவற்றில் பணிபுரிந்தவர். தமிழ்மொழி தமிழ் பயிற்றுவித்தல் மற்றும் புறநானூறு தொடர்பான நூல்களை எழுதியுள்ளார். மழலைச் செல்வம், இருட்டறையிலே உலகம் ஆகிய இரண்டும் அவருடைய கவிதைப் படைப்புகள்.

பயிற்றுப் பயிற்சியும், மொழியாசிரியர்களும்' என்னும் நூலுக்கு 1979 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

## XIII-மருத்துவம், உடலியல், உணவியல், ஆரோக்கியம் சுகாதாரம்

டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்,
எம்.பி.பி.எஸ்., எம்.ஆர்.எஸ்.எச்.,
மே/பா. விசாலாட்சி பதிப்பகம்,
7, இராமசாமி நாயுடு தோட்டத் தெரு,
சென்னை-600 014.

செங்கல்பட்டு மாவட்டம், பொதட்டூர்பேட்டையில் 1–7–1954-இல் பிறந்தவர். 'மாணவம்' ஏட்டில் பல கதைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ஓவியம் தீட்டுவதிலும் வல்லவர். நீரிழிவு நோயாளிக்கு வாழ்க்கை முறைகள், இசைபட வாழ்வோம், பால்வினை நோய்கள் முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

'நீரிழிவு நோயாளிக்கு வாழ்க்கை முறைகள்' எனும் நூலுக்கு 1979ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

திரு. இரத்தின சண்முகனார்,
30, என். எஸ். கே. தெரு,
நேரு நகர்,
சென்னை—600032.

தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினத்தில் 21–1–1925-இல் பிறந்தவர். சித்த வைத்தியக் குடும்பத்தைச் சார்ந்தவர். மருத்துவம், சிறுகதை, புதினம் மற்றும் இலக்கியம் தொடர்பான 100-க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். வீட்டுக்கு உதவும் நாட்டு மருத்துவம், எளிய தமிழ் வைத்திய முறைகள், தெய்வவழிச் சிந்தனைகள் முதலியன அவர்தம் படைப்புகளுள் சில.

உடம்பைக் காப்பாற்று' என்னும் நூலுக்கு 1979-ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகிறார்.

## XIV-கவின் கலைகள்

திருமதி. கார்த்திகா கணேசர்.

யாழ்ப்பாணத்தைச் சார்ந்த திருநெல்வேலியில் 1945-ல் பிறந்தவர். தமிழர் வளர்த்த ஆடற்கலைகள், காலந்தோறும் நாட்டியக் கலை என்னும் நூல்களை எழுதியுள்ளார். 'பாலே' முறையில் நடனங்களை அமைத்து வருகிறார். பாரதியின் பாடல்களைத் தொகுத்துக் 'கவிஞனின் கனவு' என்னும் பெயரில் மேடையேற்றியுள்ளார்.

'காலந்தோறும் நாட்டியக் கலை' என்னும் நூலுக்கு 1980ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர் ஏ. என். பெருமாள், எம். ஏ., பி. டி., பிஎச். டி.
இணைப் பேராசிரியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை–20.

1930 ஆம் ஆண்டு பிறந்தவர். ஆங்கிலத்திலும், தமிழிலும் ஏறத்தாழ 100 ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படைத்துள்ளார். 12 ஓரங்க நாடகங்களையும், பன்மொழி, இலக்கிய நாடகங்கள், தமிழ் நாடகத்தின் தோற்றமும், வளர்ச்சியும், உலக அரங்கில் நாடகம் போன்ற 9 நூல்களையும் எழுதியுள்ளார். தற்போது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இணைப் பேராசிரியராகப் பணி புரிகின்றார்.

'தமிழக நாட்டுப்புறக் கலைகள்' எனும் இவருடைய நூல் 1980 ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசைப் பெறுகின்றது.

# XV-வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, கால்நடை மருத்துவம்

திரு. செ. க. கோபாலகிருட்டிணன்.

'கோழி பராமரிப்பு' என்னும் நூலுக்கு 1980-ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர் அருணா. இராசகோபால்,
எம்.எஸ்ஸி. (வே) பிஎச்.டி.,
உழவியல் பேராசிரியர்,
மதுரை வேளாண்மைக் கல்லூரி,
மதுரை-625 104.

திருச்சி மாவட்டம், கீழக்கற்கண்டார்கோட்டையில் 13–1–1940-இல் பிறந்தவர். வேளாண்மை, அறிவியல், சமுதாயம் பற்றிய பற்பல கட்டுரைகளை எழுதியுள்ளார். வேளாண்மைத் துறை ஆராய்ச்சியாளராக இருந்து கோ. 2 கீரைத்தண்டு, கோ. 1 மிளகாய் வகைகளைக் கண்டு வெளியிட்டுள்ளார். தோட்ட வளம் எனும் நூலை எழுதியுள்ளார்.

'தோட்ட வளம்' எனும் நூலுக்கு 1980ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.

டாக்டர் கா. ஞா. சண்முகவேலு,
எம்.எஸ்சி., பிஎச்.டி.,

பேராசிரியர்,

தோட்டக்கலைத் துறை,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,

மதுரை-625 104.

திருச்சி மாவட்டம், காட்டுப்புத்தூரில் 16–11–1931-ல் பிறந்தவர். தோட்டவளம், மணமூட்டும் பயிர்களும் மலைத் தோட்டப் பயிர்களும், தோட்டக் கலை ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

''தோட்ட வளம்'' எனும் நூலுக்கு 1980ஆம் ஆண்டின் முதற் பரிசைப் பெறுகிறார்.